**அமர்வு வழக்கு எண். 48/2021**

**PW 11: விஜயனாந்தன்**

**தேதி : 13.11.2025**

**(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1ம் எதிரி கலையரசன், 3ம் எதிரி M.பிரசாத், 4ம் எதிரி ஷேக்தாவுத், 5ம் எதிரி கோகுல்நாத், 6ம் எதிரி கிரிதர் (எ) கிரி, 8ம் எதிரி சீனிவாசன் (எ) சீனு ஆகிய எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**(2ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என Crl.M.P.208/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது).**

**Crl.M.P. No. 1461/2025–ல் 01.09.2025 அன்று பிறப்பித்த உத்தரவின் பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 4, 5 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த இடம் என் கிராம எல்லைக்குட்பட்ட பகுதியாகும். உங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொலையோ தற்கொலையோ நடந்தால் உங்களுக்கு கிடைத்த தகவலை எழுதி அந்த இடத்தை பார்வையிட்டு பிரேதத்தை அடையாளம் கண்டு அறிக்கை தயார் செய்து அதனை நீதிமன்றத்ததிற்கும் காவல்நிலையத்திற்கும் உங்கள் மேலதிகாரிக்கும் அனுப்ப வேண்டும் என கிராம நிர்வாக அலுவலரின் வருவாய் கையேட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த பகுதியும் ஆட்கள் நடமாடும் பகுதி என்றும் அருகில் கடைகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். காவல்நிலையத்தை சுற்றிலும் வீடுகள் கடைகள் வேலையாகிகொண்டிருந்து என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சம்பவ நடந்த தினமான 17.12.2020 அன்று மாலை 5.30 மணிக்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு 5.30 மணிக்கு சென்ற போது காவல்நிலையத்தினர் யாரும் இல்லை. நான் 5.30 மணிக்கு சென்ற போது

தங்க செயின் சம்பவ இடத்திலிருந்ததை நான் பார்க்கவில்லை. பைக்கை பார்த்தேன். விகேசி செப்பலை பார்த்தேன். எனது அலுவலகத்திற்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் முக்கால் கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நீங்கள் எந்த பொருளையும் பார்க்கவும் இல்லை என்றும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்ட வரைபடம், பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் நீங்கள் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 23.12.2020 ஆம் தேதியன்று ஆஜர் எதிரி மற்றும் சீனிவாசனை கைது செய்து வைத்த போது அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணி என்ற கூல்மணி மற்றும் சீனிவாசன் ஆகிய இருவரும் அவர்கள் இடுப்பிலிருந்த கத்தியைத்தான் எடுத்து ஆஜர் செய்துள்ளார்கள் என்று காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் ஞாபகமில்லை. காவல் துறையினர் இந்த வழக்கு குறித்து என்னை 4 முறை விசாரித்தார்கள். 23.12.2020–ல் ஆஜர் எதிரி மணிகண்டன், மற்றொரு எதிரி சீனிவாசன் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 7 கன்னிமார்கள் கோவிலுக்கு அருகில் உள்ள முட்புதரிலிருந்து சான்று பொருட்களை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 7 கன்னிமார்கள் கோவில் இருக்கும் இடத்திற்கு தனிகிராமநிர்வாக அலுவலர் உண்டு. 7 கன்னிமார்கள் கோவில் இருக்கும் பகுதிக்கு அருகில் ரயில்வே தண்டவாளம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ரயில்வே தண்டவாளத்திற்கு இருபுறமும் விவசாய நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான் அங்கு எப்போதும் ஆட்கள் வேலை செய்வார்கள் என்று சொன்னால் சரியல்ல. 7 கன்னிமார்கள்கள் கோவில் இருக்கும் இடம் ரயில்வேக்கு சொந்தமான இடமா, தனியாருக்கு சொந்தமான இடமா, அரசுக்கு சொந்தமான இடமா என்று தெரியாது. 9ம் எதிரி உதயநிதியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த ஒரு

பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள சான்று பொருட்கள் சான்றாவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 9 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மூலம் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது எனது உதவியாளர் தனலட்சுமியும் உடன் இருந்தார். நானும் தனலட்சுமியும் ஜீப்பில் சென்றோம். நீங்கள் ஜீப் நிறுத்திய இடத்திற்கும் முட்புதருக்கும் எவ்வளவு தொலைவு தூரம் இருக்கும் என்றால் நினைவில்லை. முட்புதருக்கு செல்லும் வழியில் யார் வேண்டுமானாலும் சென்றுவரலாம் அது நடைபாதை. முட்புதரில் எந்தவொரு அடைப்பும் இல்லாமல் திறந்தவெளி என்று சொன்னால் சரிதான். அ.சா.பொ. 2 மற்றும் அ.சா.பொ.3 கத்திகளின் நீளம் மற்றும் அகலம் என்ன என்று சொல்லமுடியாது. நீங்கள் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

முட்புதர் தரையை ஒட்டி சுமார் 10 அடி சுற்றளவில் சுற்றியிருந்தது.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**அமர்வு வழக்கு எண். 48/2021**

**PW 9: பாலமுருகன்**

**தேதி : 13.11.2025**

**(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1ம் எதிரி கலையரசன், 3ம் எதிரி M.பிரசாத், 4ம் எதிரி ஷேக்தாவுத், 5ம் எதிரி கோகுல்நாத், 6ம் எதிரி கிரிதர் (எ) கிரி, 8ம் எதிரி சீனிவாசன் (எ) சீனு ஆகிய எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**(2ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என Crl.M.P.208/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது).**

**Crl.M.P. No. 1461/2025–ல் 01.09.2025 அன்று பிறப்பித்த உத்தரவின் பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 4, 5 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பெட்ரோல் பங்கு உரிமம் என் பெயரில் தான் உள்ளது. பெட்ரோல் பங்க் உங்கள் பெயரில் தான் உள்ளது என ஆவணங்களை காவல்துறையினர் கேட்டார்களா என்றால் காவல்துறையினர் இது குறித்து என்னை விசாரித்தார்கள். சிசிடிவி மற்றும் அதற்குள்ள உபகரணங்கள் அனைத்தும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனால் வாங்கி கொடுக்கப்பட்டதாகும். அதனை ஒப்பந்ததார்கள் பொருத்திக்கொடுத்தது கொடுத்தார்கள். சிசிடிவி மற்றும் அதற்குள்ள உபகரணங்கள் அனைத்தும் 2017 ஆம் ஆண்டு வைக்கப்பட்டதாகும். அதன்பிறகு நாங்களே நேரடியாக சிசிடிவி பராமரிப்பை செய்து கொண்டோம். சிசிடிவி கேமராக்கள் பெட்ரோல் பங்கில் 11 இடத்தில் பொறுத்தப்பட்டுள்ளது. சிசிடிவிகான சர்வீஸ் கரூரிலுள்ள நபர்களை வைத்து செய்து கொள்வோம். சிசிடிவி கேமராவிலிருந்து டிவிஆருக்கும், டிவிஆரிலிருந்து மானிட்டருக்கும் கனெக்ட்டாகி இருக்கும். டிவிஆரில் ஹார்ட்டிஸ்க் உள்ளது என்று சொன்னால் சரிதான். காவல்துறையினர் வந்தபோது சிசிடிவி இயக்குவதற்கான ஆட்கள் எங்கள் பங்கில் அன்றைய

தினம் இல்லை. ஒவ்வொரு மாடலிலும் எவ்வாறு காப்பி செய்ய வேண்டும் என்று வித்தியாசமான முறை உள்ளது என்று உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. டிவிஆர் எந்த நிறுவனத்தால் தயார் செய்யப்பட்டது அதன் மாடல் குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது. நான் சிசிடிவி வீடியோ காப்பி செய்ததற்கு சான்றிதழ் எதுவும் தரவில்லை. என் முன்பு கைப்பற்றியதற்காக நான் அத்தாட்சி செய்யவில்லை. எங்கள் டிவிஆரில் பென்டிரைவ் போட்டு காப்பி செய்யும் வசதிதான் உள்ளது. சிடி போட்டு காப்பி செய்யும் வசதி இல்லை. சிடி எங்கு காப்பி செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல்துறையினர் தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் தேதி குறிப்பிடவில்லை. நானப்பரப்பு, செம்மடை ஆகிய பெட்ரோல் பங்குகள் நான் இருக்கும் சாலைக்கு எதிர்புறத்தில் தான் உள்ளது. உங்கள் பெட்ரோல் பங்கிலிருந்து வேலாயுதம் பாளையம் 15 கிலோமீட்டருக்கு மேலே இருக்கும் என்று சொன்னால் சரிதான். வேலாயுதம்பாளையம் ரோட்டிலிருந்து வெங்கமேடு செல்லும் ரோட்டில் பல பங்குகள், ஹோட்டல்கள், கடைகள் உள்ளது என்று சொன்னால் அந்த சமயத்தில் வேலாயுதம்பாளையம் லாரி அசோசியேசன்ஸ்சின் ஒரே ஒரு பெட்ரோல் பங்கு தான் இருந்தது. எங்கள் பெட்ரோல் பங்கிலிருந்து ஆய்வாளர் ஹார்ட்டிஸ்க் கைப்பற்றவில்லை. நீங்கள் கூறியது போல் காவல்துறையினர் எந்த சிசிடிவி புட்டேஜ்–ம் பென்டிரைவும், சிடியும் உங்கள் முன்னிலையில் பதிவிறக்கம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.